# மேட்டுப்பாளையம் நகராட்சி

**மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 30.08.2022 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர் ,நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி.

**கூட்டப் பொருள்**

1 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2021 – 2022ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 05.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திரு.எம்.வேலுசாமி | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.95 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.1,20,26 ஆகிய வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்திகரிப்பு செய்தல் மற்றும் மோட்டார் மாற்றி இயக்கி கொடுத்தல் | ரூ.3.00 இலட்சம் | திரு.எம்.வேலுசாமி | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.98 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் இரண்டு பணிகளுக்கும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.வேலுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 1651 / 2022/இ1

**தீர்மானம் எண் : 425**

**தீர்மானம் : ஒத்திவைக்கப்பட்டது**

| | |
|---|---|
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2022 – 2023ன் கீழ் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள நாட்களுக்கு தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் 79 நாட்களுக்கு தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் (துப்புரவு பணிகள்) மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.35.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 26.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கிடைக்கப்பெறாத காரணத்தால் 12.08.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் (Offline) மூலம் நேரடியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப தகுதி பெற்று 16.08.2022 அன்று விலைப்புள்ளி உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 79 நாட்களுக்கு தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் (துப்புரவு பணிகள்) மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.35.00 இலட்சம் | M/s.S.S.Foundation சென்னை | 0.06 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | M/s.Alpha faulity service Pvt Ltd, சென்னை | 2.80 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். S.S.Foundation சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 2530/2022/எச்1

**தீர்மானம் எண் : 426**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

3 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021 – 2022 கோயம்புத்தூர் மாவட்டம் திரு.A.K.செல்வராஜ் சட்டமன்ற உறுப்பினர், மேட்டுப்பாளையம் தொகுதி அவர்களால் கீழ்க்கண்ட பணிகள் பரிந்துரைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கோவை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.05/2022/ஆ2, நாள்.21.07.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதிற்கிணங்க கீழ்க்கண்ட பணிகளுக்கு 23.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.29, பள்ளத்து மேடு பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சப்மெர்சிபில் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | ரூ.3.80 இலட்சம் | திரு.என்.ஜெகநாதன் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.VRK கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.95 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.30 அன்னை நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சப்மெர்சிபில் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | ரூ.3.80 இலட்சம் | திரு.S.S.கோபாலகிருஷ்ணன் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருமதி.S.சுந்தரி | 4.97 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | வார்டு எண்.24 திருவள்ளுவர் நகர்-2 பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சப்மெர்சிபில் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | ரூ.3.80 இலட்சம் | திரு.S.S.கோபாலகிருஷ்ணன் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருமதி.S.சுந்தரி | 4.96 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | வார்டு எண்.10 Tan india காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சப்மெர்சிபில் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | ரூ.3.80 இலட்சம் | திருமதி.S.சுந்தரி | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.S.S.கோபாலகிருஷ்ணன் | 4.98 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5 | வார்டு எண்.31 தண்டுமாரியம்மன் கோவில் அருகில் புதிய அழ்துளை கிணறு அமைத்து சப்மெர்சிபில் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | ரூ.3.80 இலட்சம் | திருவாளர்.VRK கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.என்.ஜெகநாதன் | 4.95 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2621 / 2022/இ1

**தீர்மானம் எண்** : 427

**தீர்மானம்** : **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலத்தில் சுமார் 35 கணினிகள், 16 பிரிண்டர்கள், ஸ்கேன் 1, சர்வர் 1 மற்றும் ஆல் இன் ஒன் கணினி மற்றும் பிரிண்டர் 3, டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர் 2 மற்றும் அலுவலகத்தில் அவ்வப்போது ஏற்படும் பகுதுகள் சுவிட்சுகள், மோடம், கேபிள், நெட்ஒர்க் ஆகியவை ஆண்டு பராமரிப்பு செய்யவும், பழுதான கணினிகள், பிரிண்டர்கள் சரி செய்யவும் , வரும் நிதியாண்டு 2022 – 2023க்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4, 00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1825 / 2022/இ1<br><br>**தீர்மானம் எண் : 428**<br><br>**தீர்மானம் : நிராகரிக்கப்பட்டது** |
| 5 | நமது நாட்டின் 75வது சுதந்திர தின விழாவினை கொண்டாடும் விதமாக ‘’Har Ghar Tiranga’’ (அனைத்து வீடுகளிலும் தேசியக் கொடி) என்ற பிரச்சாரம் மூலம் நகராட்சியில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் தேசியக் கொடி ஏற்ற இந்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தேசியக் கொடி (30”X 20’’) கொள்முதல் செய்யும் பணியினை ஆதிசக்தி விநாயகர் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேலும், மேற்கண்ட பணி மற்றும் நோட்டீஸ் அச்சடித்தல் , விளம்பர பலகை வைத்தல் ஆகிய பணிகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 2862 / 2022/எப்1<br><br>**தீர்மானம் எண் : 429**<br><br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

6

பார்வை : அரசாணை எண்.43, நாள்.27.07.2022

பார்வையில் காணும் அரசாணையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் விதி எண்.110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்க ஆணையிட்டதிற்கிணங்க,

மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள 9 தொடக்கப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 1119 மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்க 16.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விலைப்புள்ளி உறையினை 17.08.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு நாள் ஒன்றுக்கு / ஒரு குழந்தைக்கு |
|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் (CMBFS) 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளி நாட்களில் காலை சிற்றுண்டி வழங்கும் பணி | M/s.Naina Catering Service, மேட்டுப்பாளையம் | ரூ.12.70/- |
| | | M/s.Juice Box , மேட்டுப்பாளையம் | ரூ.13.50/- |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்தள்ள திருவாளர். M/s.Naina Catering Service, மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. இவ்வொப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு சமமாக இருப்பதாலும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதியும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்.
   ந.க.எண்.1653/2022/இ1

**தீர்மானம் எண் : 430**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

7

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள வள்ளுவர் நகராட்சி பள்ளியில் உள்ள மேடை அமைந்துள்ள இடத்தில் வேறு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இதனை மாற்றி புதியதாக மேடை அமைக்க மற்றும் இதர பணிகள் ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 431**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

| | |
|---|---|
| 8 | இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவற்கு பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காணும் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Flame Advertising Company Private Limited நிறுவனத்திடமிருந்து விளம்பரம் கட்டணம் ரூ.4778/ஐ வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை Flame Advertising Private Limited விளம்பரம் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண். 1974/2021/இ1**<br>**தீர்மானம் எண் :** 432<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| 9 | 1. அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் . 24.06.2022<br>2. அரசாணை (நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022<br>மேற்காணும் அரசாணைகளில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24-B. 24-H மற்றும் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் படி வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கும் விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 3221/2022/சி3<br>**தீர்மானம் எண் :** 433<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| 10 | இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.318, நாள். 28.04.2022ல் இந்நகராட்சி டெங்கு கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் பணியார்களின் பணி காலத்தினை 24.04.2022 முதல் 21.07.2022 வரை நீடிப்பு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நகர் மன்ற தீர்மானம் எண்.387, நாள்.28.06.2022 இந்நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்க காலதாமதம் ஆகும் என்பதால் பொது மக்களின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு 22.07.2022 முதல் 30.08.2022 வரை கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணி காலத்தினை நீட்டிப்பு செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1513680/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்**.<br>2. டெங்கு நோய் தொற்று பரவாமல் இருக்கவும், பொது மக்களின் நலன் கருதியும் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.கஎண்.1688/2016/எச்1<br>**தீர்மானம் எண் :** 434<br>**தீர்மானம் : ஒத்திவைக்கப்பட்டது** |
| 11 | இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மைப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பொது சுகாதாரம் மற்றும் பள்ளி ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு தற்போது பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கே அவர்கள் ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தத் தொகையின் அடிப்படையில் தொகை வழங்கவும் மேலும் 01.08.2022 முதல் 89 நாட்களுக்கு பணி நிடிப்பு செய்து உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகித்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.08.2022 முதல் பணிபுரிந்ததை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.494/2020/எச்1<br>**தீர்மானம் எண் :** 435<br>**தீர்மானம் : நிராகரிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| 12 | அ). இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணிகள் மேற்கொண்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ் என்ற நிறுவனம் 16.08.2022 ஆம் தேதி கடிதத்தில் தங்கள் பணியாளர்கள் ஊதிய உயர்வு கோரியும் பணிக்கு வராமல் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்காமல் உள்ளதாலும், தூய்மைப் பணிகளை செய்ய இயலாத காரணத்தினால் ஒப்பந்தத்தினை ரத்து செய்து தரும்படி கோரியுள்ளார். எனவே, திருவாளர்.எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 01.09.2022 முதல் ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ஆ), நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை சுய உதவிக்குழு மூலம் 120 தூய்மைப் பணியாளர்களை கொண்டு 65 நாட்களுக்கு தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.34,10,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.6219/2009/எச்1<br>**தீர்மானம் எண் : 436**<br>**தீர்மானம் : ஒத்திவைக்கப்பட்டது** |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண் 58 மாத வாடகை 1,09,000/-ஆக இருந்தது மேற்கண்ட கடைக்கு நீண்ட நாட்களாக வாடகை செலுத்தாமல் நிலுவையில் இருந்த காரணத்தால் கடை பூட்டி சீல் வைக்கப்பட்டு கடை குத்தகைதாரர் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு மேற்படி 58ம் கடையை ஐந்து கடைகளாக பிரித்து அதற்கு தற்போதைய மார்கெட் மதிப்பின் அடிப்படையில் ஆரம்ப வாடகை நிர்ணயம் செய்து வழங்க 4நபர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது.<br>மேற்கண்ட குழு பேருந்து நிலைய கடைகளை சுற்றியுள்ள கடைகளின் மார்கெட் வாடகையை கூர்ந்தாய்வு செய்து கீழ் கண்ட கடைகளுக்கு ஆரம்ப வாடகை நிர்ணயம் செய்து குழு அறிக்கை சமர்ப்பத்துள்ளது. |

| வ. எண் | கடை எண் | கடை அமைவிடம் | கடையின் அளவு சதுர அடி | 2022க்கு முந்தைய வாடகை | தற்போது குழு நிர்ணயம் செய்த வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 14A | அண்ணா வணிக வளாகம் | 48 | 1984 | 4560 |
| 2. | 23 | அண்ணா வணிக வளாகம் | 135 | 21821 | 14040 |
| 3. | 58 | பேருந்து நிலையம் | 292 | 109000 | 38544 |
| 4. | 58A | பேருந்து நிலையம் | 292 | | 38544 |
| 5. | 58B | பேருந்து நிலையம் | 100 | | 13200 |
| 6. | 58C | பேருந்து நிலையம் | 72 | | 9504 |
| 7. | 58D | பேருந்து நிலையம் | 294 | | 38808 |

நீண்ட நாட்களாக வாடகை செலுத்தாமல் நிலுவையில் இருந்த காரணத்தால் கடை பூட்டி சீல் வைக்கப்பட்டு பூட்டிய நிலையிலேயே உள்ளதால் கட்டிடமும் சேதாரமடைவதோடு வருவாய் இன்றி உள்ளது. இதனை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் நகராட்சி நிர்வாக நலன் கருதி குழுவினால் நிர்ணயித்து பரிந்துரைக்கப்பட்ட ஆரம்ப வாடகையை அடிப்படையாக கொண்டு பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விட மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு காலியாக உள்ள கடைகளால் ஏற்படும் நிதியிழப்பை தடுக்கவும் நகராட்சிக்கு வருவாயை பெருக்கவும் மேற்படி குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.
2. மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகையின் அடிப்படையில் ஏலம் நடத்திடவும் அதன் அறிவிப்பினை நாளிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்
   ந.க.எண்.211/2022/அ1

**தீர்மானம் எண் : 437**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

| | |
|---|---|
| 14 | இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு விழாவை சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவாக சுதந்திர வாரம் 13.08.2022 முதல் 15.08.2022 வரை அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி நிகழ்ச்சி மூலம் கொண்டாட ஏதுவாக அனைத்து வீடுகளிலும் தேசியக் கொடி ஏற்றவும் ஒவ்வொரு துறைக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மேட்டுப்பாளையம் நகராட்சியின் 33 வார்டுகளிலும் பொது மக்களுக்கு ஆட்டோ மூலம் விழிப்புணர்வு செய்யவும் மற்றும் ஆதார் எண் வாக்காளர் பட்டியலுடன் இணைக்கும் பணிக்கு பொதுமக்களிடம் படிவம் "6 பி" படிவத்தினை வழங்கி விவரம் பெற பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.45,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அனைத்து வீடுகளிலும் தேசியக்கொடி ஏற்றவும் மற்றும் தேர்தல் பணி அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டு நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.3025/2022/அ3<br>**தீர்மானம் எண் : 438**<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 கெண்டையூர் சாமப்பா லே அவுட் பகுதியில் சமச்சீராக குடிநீர் விநியோகம் செய்ய இயலாத காரணத்தினால் அப்பகுதியில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே, அப்பகுதியில் புதிய பகிர்மானக் குழாய் அமைத்து interlink செய்யவும் மற்றும் இதர குடிநீர் பணிகள் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**தீர்மானம் எண் : 439**<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |